**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பாப்பிரெட்டிபட்டி**

**முன்னிலை: திரு.ஜெ.ராஜேஸ்குமார், எம்,எல்,.**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பாப்பிரெட்டிபட்டி**

**(முழு கூடுதல் பொறுப்பு)**

**2023-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 6 ம் நாள் திங்கட்கிழமை**

**அசல் வழக்கு எண்.156/2015**

பங்கஜம் ... வாதி

// எதிராக //

1. மாசிலாமணி,

2. ராஜேந்திரன், ... பிரதிவாதிகள்

இந்த மனுவானது 07.10.2023 ம் தேதியன்று விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.குமார்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வக்காலத்து தாக்கல் செய்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்தும், வாதுரை செய்யாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினர்களாக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், வாதிகள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இறுதியாக இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

1) தாவா சொத்தில் வாதியின் உரிமையை விளம்புகை செய்யக்கோரியும், தாவா சொத்தில் வாதியின் நிம்மதியான சுவாதீன அனுபவத்திற்கு எதிராக பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ அத்துமீறி உள்ளே நுழைந்து எவ்விதமான அக்கிரம பிரவேசமும், அழிம்பும் செய்ய கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை உத்திரவு பிறப்பிக்க கோரியும், வழக்குச் செலவுத்தொகை யாவும் வாதிக்கு பிரதிவாதிகளால் கிடைக்க கோரியும் வழக்கு தொடரப்பட்டது.

## 2) வழக்குரையின் சுருக்கம்

தாவா சொத்து வாதிக்கு கடந்த 28.07.2010-ம் தேதயி கிரயப்பத்திரம் மூலம் பாத்தியம், அனுபவம், சுவாதீனம் ஆகும். தாவா சொத்தை வாதி, கிரயம்பெற்ற பிறகு, தாவா சொத்திற்கான வருவாய்துறை ஆவணங்களை வாதி அவரது பெயருக்கு ஏற்படுத்தி, அரசுக்கு செலுத்த வேண்டிய தீர்வை செலுத்தி அனுபவித்து வருகிறார். தாவா சொத்தில் வாதியைத்தவிர பிரதிவாதிகள் உட்பட வேறு யாருக்கும் எவ்விதமான உரிமையோ, அனுபவமோ, சுவாதீனமோ கிடையாது. தாவா சொத்தை பொறுத்து, பிரதிவாதிகள் 3-ம் நபர்கள் ஆவார்கள். தாவா சொத்து விவசாய நிலமாகும். தாவா சொத்திற்கு மேற்கிலும் வடக்கிலும், வாதியின் மகன் மைனர் பாலாஜி என்பவர் பெயரில் நிலம் உள்ளது.  அந்த நிலங்களையும் வாதியே கூட்டாக சாகுபடி செய்து அனுபவித்து வருகிறார். தாவா சொத்திற்கும் மைனர் பாலாஜி சொத்திற்கும் சேர்த்து வாதி தீர்வை செலுத்தி வருவதால், தாவா சொத்திற்கான தீர்வை ரசீதில் மைனர் பாலாஜி வகையறா என குறிப்பிடப்பட்டுள்ளது.

1-ம் பிரதிவாதியின் மகன் 2-ம் பிரதிவாதி ஆவார். 1, 2 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்திற்கு தெற்கு பகுதியில் விவசாய நிலங்கள் உள்ளது. பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட நிலங்களுக்குச் செல்லவும், தங்களது வசதிக்காகவும், வேண்டி, வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை விலைக்கு விற்றுவிட வேண்டுமாய் கடந்த 1 வருட காலமாக கேட்டு வந்தார்கள். ஆனால் வாதி தாவா சொத்தை பிரதிவாதிகளுக்கு கொடுக்க மறுத்துவிட்டார். அதகால் பிரதிவாதிகள் கடந்த 1 வருட காலமாக கேட்டுவந்தார்கள் . ஆனால் வாதி தாவா சொத்தை பிரதிவாதிகளுக்கு கொடுக்க மறுத்துவிட்டார். அதனால் பிரதிவாதிகள் கடந்த 28.05.2015-ம் தேதியில் தாவா சொத்தில் அத்துமீறி உள்ளே நுழைந்து வாதியின் தோட்டத்தில் வேலை செய்யும் வேடியப்பன் என்பவரை தாக்கினார்கள். அதனால் வாதியின்

தோட்டத்தில் வேலை செய்யும் வேடியப்பன் என்பவர், 1, 2 பிரதிவாதிகள் மீதும் மற்ற நபர்கள் மீதும், பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, பாப்பிரெட்டிப்பட்டி காவல் துறையினர் 1,2 பிரதிவாதிகள் மீதும், மற்றும் சில நபர்கள் மீதும் 30.05.2015-ம் தேதியில் குற்ற எண்.269/2015 பிரிவு 147, 294(b), 323, 324 IPC படி வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது.

இந்நிலையில் கடந்த 18.11.2015 ம் தேதியில் 1, 2 பிரதிவாதிகள் ஏற்கனவே வாதியின் மீதுள்ள முன்விரோதத்தின் காரணமாக தாவா சொத்தில் தங்களுக்கும் உரிமை உள்ளது எனக்கூறி, தாவா சொத்தில் வாதிக்குள்ள உரிமையை மறுத்து தாவா சொத்தில் அக்கிரம பிரவேசமும், அழிம்பும் செய்ய முயற்சி செய்தார்கள். அதை வாதி அருகிலிருந்தவர்களின் துணையுடன் தடை செய்து விட்டார். இருப்பினும் பிரதிவாதிகள் மீண்டும் அதிக ஆட்களுடன் வந்து தாவா சொத்தில் அக்கிரம பிரவேசமும், அழிம்பும் செய்து வாதியின் நிம்மதியான சுவாதீன அனுபவத்திற்கு இடைஞ்சல்களையும், தொல்லைகளையும் செய்ய போவதாகவும் கூறி சென்றார்கள். பிரதிவாதிகளின் செயல் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பானதாகும். பிரதிவாதிகளின் செயலை கனம் நீதிமன்றத்தின் தடை உத்தரவின் மூலமே தான் தடை செய்ய இயலும்.

பிரதிவாதிகள் ஆள்பலமும், அரசியல் செல்வாக்கும், பணபலமும்மிக்கவர்கள் ஆவார்கள். பிரதிவாதிகள் சட்டத்திற்கும் நியாயத்திற்கும் கட்டுப்படாதவர்கள் ஆவார்கள். பிரதிவாதிகளால் தாவா சொத்தில் வாதிக்குள்ள உரிமைக்கு எந்நேரத்திலும் களங்கம் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. அதனால் தான் வாதி பிரதிவாதிகளின் மீது தாவா விளம்புகைக்கும், நிரந்தர உறுத்துக்கட்டளைக்கும் வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய

அவசயிம் ஏற்பட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) <u>1-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யும் எதிர் வழக்குறை சுருக்கம்</u>

தாவா சொத்து முதலில் ராமகிருஷ்ணன் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தாகும். தாவா சொத்தின் கிழக்கு பக்கம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வண்டிப்பாதை பல ஆண்டுகாலமாக சென்று வருகிறது. மேற்படி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் வண்டிப்பாதை பல நபர்களின் நிலங்கள் வழியாக செல்கிறது. மேற்படி தாவா சொத்திற்கு கிழக்கு பக்கமுள்ள வண்டிப்பாதை வழியாக பிரதிவாதிகளும் மற்றும் பக்கத்து நிலத்துக்காரர்களான சுமார் 18 குடும்பத்தினர்களும் தங்களது ஆட்கள், கால்நடைகள், வண்டி வாகனங்கள் ஆகியவற்றை மேற்படி பாதையின் வழியாக ஓட்டிச் சென்று உபயோகித்து வருகின்றனர். மேற்படி ராமகிருஷ்ணனிடமிருந்து வாதி தாவா சொத்தை கிரையம் பெற்றபிறகும் மேற்படியாளர்கள் மேற்படி வண்டிப்பாதையை உபயோகித்து வருகின்றனர். இந்த பிரதிவாதிகளின் வளர்ச்சியில் பொறாமைக் கொண்டு வாதியும் அவரது குடும்பத்தாரும் தாவா சொத்துக்கு கிழக்கு பக்கம் உள்ள பாதை வழியாக இந்த பிரதிவாதிகள் செல்வதை தடை செய்து பல வகைகளில் பிரச்சினைகள் செய்து வருகின்றனர். வாதி தன்னுடைய பணபலம் மற்றும் படை பலத்தால் பிரதிவாதிகள் மேற்படி பாதையின் வழியாக செல்வதை அக்கிரமமான முறையில் தடை செய்தும், பிரச்சினைகள் செய்தும் வருகின்றனர். மேற்படி பாதையை தவிர பிரதிவாதிகள் அவரது நிலங்களுக்கு செல்ல வேறு எந்தவிதமான வழியும் இல்லை. வாதியின் மேற்படி செயல் மிகவும் சட்ட விரோதமானது. தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு வண்டி பாதை வசதி உரிமைகள் இருப்பதை மறைத்து வாதி பொய்யான சங்கதிகளுடன் இந்த தாவாவை தாக்கல்

செய்துள்ளார்.

**4)** வாதி தரப்பில் வாதியே வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5)** **<u>வழக்கெழு வினாக்கள்</u>:**

**1. Whether the plaintiff is entitled to the relief of Declaration as prayed for?**

**2. Whether the plaintiff is entitled to the relief of Permanent Injunction as prayed for?**

**3. To what other reliefs the plaintiff is entitled for?**

**<u>எழுவினா 1 மற்றும் 2</u>**

வாதிக்கு விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா என்பதேயாகும்.

**6)** வாதி தரப்பில் வாதியே வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 28.06.2010 ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் உண்மை நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 21.11.2015 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கான அடங்கல் உண்மை நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 28.02.2015 ம் தேதியிட்ட கிஸ்து ரசீது அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 30.09.1996 ம் தேதியிட்ட கிரைய சாசனம் கணினி நகல் வா.சா.ஆ.4 ஆகவும், தாவா புல வரைப்படம் கணினி நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 27.07.2022 ம் தேதியிட்ட சிட்டா கணினி நகல் வா.சா.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**7)** மேற்படி ஆவணங்களை பரிசீலினை செய்ததில், தாவா சொத்துக்கள் வாதிக்கு

கிரையப்பத்திரங்கள், அடங்கல், கிஸ்து ரசீது , தாவா புல வரைப்படம் மற்றும் கணினி சிட்டா, ஆகிய ஆவணங்களை பரிசீலினை செய்ததில் வாதி மூலம் பாத்தியப்பட்டு அவர் அனுபவத்தில் இருந்து வருவது தெரிய வருகிறது.

**8)** மேற்படி வழக்கில் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த போதிலும், வாதி தரப்பு சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதிகள் தரப்பு முன் வராததால் பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராகியுள்ளார். பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதியின் வழக்கை மறுத்து சாட்சியமளிக்கவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை சாட்சியமும் முன்னிடவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

**9)** மேலே சொன்னவற்றை பரிசீலித்ததில், வாதி தனது தரப்பினை சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே வாதி கோரியவாறு விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற வாதி அருகதையுடையவர் என்று முடிவு செய்து 1 மற்றும் 2 எழுவினாக்களுக்கு வாதிக்கு ஆதரவாக விடைக் காண்கிறது.

<u>**எழுவினா -3**</u>

**10)** வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இவ்வெழுவினாவிற்கு விடைக்காண்கிறது.

**11)** **இறுதியாக**, தாவா கீழ்க்கண்டாவாறு அனுமதிக்கப்படுகிறது.

(1). தாவா சொத்தில் வாதியின் உரிமையை விளம்புகை செய்யப்படுகிறது.

(2). தாவா சொத்தில் வாதியின் நிம்மதியான சுவாதீன அனுபவித்திற்கு எதிராக பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, அத்துமீறி உள்ளே நுழைந்து எவ்விதமான

அக்கிரம பிரவேசமும், அழிம்பும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்படுகிறது.

(3). செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6 ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

J RAJESHKUMAR

Digitally signed by J RAJESHKUMAR
Date: 2023.11.06 17:46:28 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பாப்பிரெட்டிப்பட்டி(முழு கூடுதல் பொறுப்பு)**

**இணைப்பு**

**வாதி தரப்பு சாட்சிகளின் பட்டியல்**

| | | |
|---|---|---|
| 1. | வா.சா.1 | பங்கஜம் (வாதி) |

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.1 | 28.06.2010 | வாதி கிரயம் பெற்ற கிரய பத்திரம்- உண்மை நகல் |
| 2. | வா.சா.ஆ.2 | 21.11.2015 | தாவா சொத்திற்கான அடங்கல் - உண்மை நகல் |
| 3. | வா.சா.ஆ.3 | 28.02.2015 | கிஸ்து ரசீது - அசல் |
| 4. | வா.சா.ஆ.4 | 30.09.1996 | கிரய சாசனம் கணினி நகல் |
| 5. | வா.சா.ஆ.5 | 27.07.2022 | தாவா புல வரைபடம் கணினி நகல் |
| 6. | வா.சா.ஆ.6 | 27.07.2022 | சிட்டா கணினி நகல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகளின் பட்டியல்</u>** - இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>** - இல்லை

J RAJESHKUMAR Digitally signed by J RAJESHKUMAR Date: 2023.11.06 17:46:51 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பாப்பிரெட்டிப்பட்டி(முழு கூடுதல் பொறுப்பு)**